IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

		O.S. No.	:	**139/2022**
		P/W's	:	**Pw1**
DEPOSITION OF WITNESS			:	
NAME	ஹரிஹரபோஸ்	CASTE	:	
S/O	அய்யாக்கண்ணுத்தேவர்	RELIGION	:	**இந்து**
VILLAGE	பெருமாள்பட்டி, குலசேகரன் கோட்டை	CALLING	:	
TALUK	**வாடிப்பட்டி**	AGE	:	**80**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.03.2026

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:

1. வழக்கில் வழக்குச் சொத்து என்னுடையது என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்குச் சொத்து எனது தாத்தா விட்டில்சூரியதேவருக்கு பாத்தியப்பட்டது. எனது தாத்தாவிற்கு நான்கு வாரிசுகள். நான் அய்யாகண்ணுத்தேவரின் மகன். அய்யாக்கண்ணுதேவருக்கு மூன்று வாரிசுகள், நமச்சிவயான், நான் மற்றும் திருஞான+ம். மேற்படி மூன்று வாரிசுகளையும் வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் நான்தான் வழக்குச் சொத்துக்களை பார்த்துக்கொள்கிறேன், அதனால் அவர்களை சேர்க்கவில்லை.

2. எனது சகோதரர்களுக்காவும் இந்த வழக்கைத் தாக்கல் செய்ததாக அவர்களிடம் ஒப்பந்த பத்திரம் எதுவும் எழுதி வாங்கவில்லை. எனது வழக்கு சரியான தரப்பினர்களை சேர்க்காத காரணத்தால் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது என்பதைக் காட்ட வா.சா.ஆ.1 'அ' பதிவேடு, கடன் பத்திரம் மற்றும் விடுதலைப் பத்திரத்தைத் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தாத்தாவின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

3. வழக்குச் சொத்து எனது தாத்தாவின் சொத்து இல்லை என்பதால்தான் வா.சா.ஆ.1ல் அவர் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் வயதாகிவிட்டதால் என்னால் அந்த ஆவணத்தை படிக்க முடியவில்லை, சர்வே எண்.285/2ல் அவர் பெயர் உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.285/2ல் நாட்டாமை என்றுதான் உள்ளது என்றாலும், எனது தாத்தா பெயர் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல.

வழக்குச் சொத்து தற்போது எனது அப்பா அய்யாக்கண்ணுத்தேவர் மற்றும் எனது சித்தப்பா பெரிய கருப்பதேவர் ஆகியோரின் அனுபவத்தில் உள்ளது. எனது அப்பா மற்றும் சித்தாப்பாவின் அனுபவத்தில் வழக்குச் சொத்து உள்ளதைக் காட்ட வருவாய் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன்.

4. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் எனது அப்பா மற்றும் சித்தப்பாவின் அனுபவத்தைக் காட்டும் வகையில் இல்லை என்றால் சரிதான், எனது தாத்தாவின் வாரிசுகள் என்றுதான் குறிப்பிட்டிருக்கும். வா.சா.ஆ.1ல் ஆவணத்தில் எனது அப்பா மற்றும் சித்தாப்பாவின் பெயர் இல்லை என்றால் நாட்டாமை, பட்டா எண்.12 என்று உள்ளது. மேற்படி நாட்டாமை என்பது எனது அப்பா மற்றும் சித்தப்பாதான் என்று நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளேன்.

5. தாவா சொத்து எனது அப்பா மற்றும் சித்தப்பாவின் பெயரில் இல்லை என்பதால்தான் நான் வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

மேலும் குறுக்கு விசாரணை செய்ய ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/-
M.P. ராம்கிஷோர்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

/TRUE COPY/